தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 9, தாது-திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஜூலை 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

கொலை முதலிய கொடுமைகளைப் புரிவோரை ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது, பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பது போன்றது ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13—

அரசுப் பணியாளர் தேர்விற்கு கல்வித் தகுதி

* ***818***-திரு. இ. கணேசன்:

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொகுதி IV அரசுப் பணியாளர் தேர்வு எழுத 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதுடன், தட்டச்சு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும் என இருப்பதை முன்பிருந்தபடியே மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொகுதி IV அரசுப் பணியாளர் தேர்வு எழுத 10-ஆம் வகுப்பு (S.S.L.C.) தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது. தட்டச்சில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏதும் பணிவிதிகளில் குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசுப்பணியில் நியமனம் செய்த பிறகு தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சில் கீழ்நிலையில் தேர்ச்சி பெறவேண்டும் என்று அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குரூப்-4 தேர்வு - இளநிலை உதவியாளர் பணிக்கு—எப்போது நடத்துவதாக உத்தேசம் உள்ளது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தட்டச்சில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டுமா என்ற மூலக் கேள்விக்கான விடையை நான் வழங்கி இருக்கின்றேன். இந்தக் கேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் அதுபற்றி விபரம் சேகரித்து பதில் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

14—

கடலூர் துறைமுக விரிவாக்கப் பணி

* *20*—**திரு இ. புகழேந்தி :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுக விரிவாக்கப் பணி எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.